**MCOP. No. 69 /2022**

P.W.1 - **தமிழ்செல்வன்**

தேதி: 09.02.2024

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் செய்யாறு அறிஞர் அண்ணா கலைக்கல்லூரியில் கம்ப் யூட்டர் சயின்ஸ் விபத்து சமயத்தில் படித்துக்கொண்டிருந்தேன். நான் தற்போது ஒரு கம்பனியில் பணிபுரிந்து வருகிறேன். நான் சம்பவம் நடந்த அன்று தடம் எண் 38 புலிவலம் சுணைப்பட்டு டூ ஆற்காடு செல்லும் பேருந்தில் கல்லூரியில் இருந்து வந்துகொண்டிருந்தேன். நான் கல்லூரியில் இருந்து திரும்பும் போது அண்ணா நகரில் வைத்து விபத்து நடந்தது. எனது கல்லூரிக்கும் விபத்து நடந்த இடத்திற்கும் சுமார் 40 கி மீ தொலைவு இருக்கும். விபத்து நடந்த இடத்தில் இருந்து ஆற்காடு சுமார் 10 கி மீ தொலைவு இருக்கும். அண்ணா நகர் பஸ் ஸடாண்டு தாண்டி பஸ் வந்துகொண்டிருக்கும் போது திருப்பத்தில் விபத்து நடந்தது. அண்ணா நகர் பஸ்ஸடாண்டில் இருந்து விபத்து நடந்த இடத்திற்கு சுமார் 1/2 கி மீ தொலைவு இருக்கும். அப்போது பேருந்து மெதுவாக சென்றுகொண்டிருந்தது என்றால் சரியல்ல. வேகமாக சென்றுகொண்டிருந்தது. நான் பேருந்தில் வலது பக்கத்தில் உள்ள பின்பக்க சக்கரத்திற்கு நேர் மேலே உள்ள சீட்டில் உட்கார்ந்து பயணம் செய்துகொண்டிருந்தேன். அப்போது நான் உட்கார்ந்த சீட்டின் கீழே இருந்த பேருந்தின் பின்பக்க டயர் வெடித்ததில் நான் தூக்கி வீசப்பட்டேன். நான் அந்த பேருந்தின் டயர் வெடித்திருந்ததை பார்த்தேன். எனது வலது கால் முட்டிக்கு கீழே எலும்பு உடைந்துவிட்டது. வலது பக்க குதிகால் பகுதியில் கிழிக்கப்பட்டு ரத்தம் வந்துகொண்டே இருந்தது. நான் பேருந்துக்கு பயணச்சீட்டு தினமும் வாங்கி செல்வேன். மேற்படி பேருந்தின் பயணச்சீட்டை விபத்தில் சிக்கி உட்கார்ந்திருக்கும் போது நடத்துனர் என்னிடம் இருந்து பயணச்சீட்டை திரும்ப வாங்கிகொண்டார். சம்பவம் நடந்தது பற்றி

என்னுடைய நண்பன் முருகன் போலீசாருக்குதகவல் தெரிவித்தார். நான் மாதம் ரூ.15,000/- சம்பளம் வாங்குகிறேன். அதற்குரிய சம்பள சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் டயர்கள் திருப்திகரமாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் கல்லூரிக்கு செல்லும் போதும் திரும்ப வரும்போதும் பேருந்தின் படிக்கட்டில் தான் பயணம் செய்வேன் என்றால் சரியல்ல. நான் பேருந்தின் படிக்கட்டில் பயணம் செய்யும் போது என்னுடைய கை தவறி நான் கீழே விழுந்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்ட பேருந்தில் பயணம் செய்யவில்லை என்றும் எங்கோ நடந்த விபத்தை இந்த பேருந்தை தொடர்பு படுத்தி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்கள் தற்போது குணமாகிவிட்டது ஆனால் வலி இன்னும் இருக்கிறது. தற்போதும் இரும்பு ராடு வலது காலில் உள்ளது. நான் பயணம் செய்த பேருந்தில் சுமார் 30 பேர் பயணம் மேற்கொண்டிருப்பார்கள். அந்த ரோடு 15 அடி அகலம் இருக்கும். அந்த தார் ரோட்டிற்கு இருபக்கங்களிலும் செடிகள் முளைத்த மண் ரோடு உள்ளது. காவல் நிலையத்தில் புகார் நான் தான் கொடுத்தேன். விபத்து சமயத்தில் என்னுடைய நண்பர் முருகன் (எ) அஜீத்குமார் மற்றும் நீஜா ஆகியோர்கள் பேருந்தில் பயணம் செய்தார்கள். போலீசார் அவர்களை விசாரணை செய்தார்கள். நான் விபத்து சமயத்தில் படித்துக்கொண்டிருந்தேன். ஆனால் சம்பாதிக்கவில்லை. பேருந்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு எடுத்து சென்றது எனக்கு தெரியாது. நான் போலீஸ் விசாரணையில் பேருந்தின் டயர் வெடித்து ஏற்பட்ட விபத்தில் எனக்கு காயம்பட்டதாக சொல்லியுள்ளேன். என்னைத்தவிர பேருந்தில் முன்பகுதியில் பயணம் செய்த 2, 3 பயணிகளுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டது. பேருந்து சம்மந்தப்பட்ட வாகன ஆய்வறிக்கையில் டயர் வெடித்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் பேருந்தின் படிக்கட்டில் நின்று பயணம் செய்ததில் கை தவறி கீழே விழுந்து அடிப்பட்டு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

இந்த விபத்திற்கு காரணம் என்னுடைய அஜாக்கிரதை தான் என்று சொன்னால் சரியல்ல. பேருந்து ஓட்டுனரின் அஜாக்கிரதை விபத்துக்கு காரணம் அல்ல என்றால் சரியல்ல. பேருந்தின் டயர் வெடித்து விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

ம.சா.ஆ.3 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் காளம் 12ல் 1.Rearside Wheel arch top plywood damaged. 2. Rearside inner tyer damaged என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மீண்டும் குறுக்கு விசாரணை**

மேற்படி வாகன ஆய்வறிக்கையில் டயர் வெடித்தது என்று நேரடியாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் டயர் வெடித்தால் தான் plywood சேதம் ஆகும் என்று சாட்சி சொல்கிறார்.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH